(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தஞ்சாவூர் ராசா சத்திரம் ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே எடுப்பதற்கு ஏற்பாடு செய்வதாக அறிகிறேன். அப்படி எடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கைக் குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படித் தகவல் ஒன்றுமில்லை. தற்போது தஞ்சை மாவட்ட ஆட்சியாளருடைய நிர்வாகத்திலேதான் இருந்து வருகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தஞ்சாவூர் ராசா சத்திரத்தின் அறக்கட்டளை என்னென்ன தர்மங்கள் செய்கிறது? எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன? தற்போது என்னென்ன தர்மங்கள் அதன் மூலம் நடைபெறுகின்றன என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சத்திர நிர்வாகத்திற்குச் சொந்தமான பிரகதாம்பாள் சத்திரமும், மணற்மேற்குடியில் 220.96 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளன. அதன் மூலம் ரூ. 5,351 ஆண்டு வருமானமாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால் தனித்தனியாக ஒவ்வொரு வருமானத்தின் பெயரிலும் காரியங்கள், தர்மங்கள் செய்யப்படுகின்றன; மொத்த வருமானத்தின் அடிப்படையிலேயும் பல்வேறு தர்ம காரியங்கள் செய்யப்படுகின்றன. மாணவர்கள் மாணவிகளுக்கு இலவசக் கல்வி அளிப்பது, கல்லூரிகள், உயர்நிலை, இடைநிலைப் பள்ளிகள், சத்திர மருத்துவ மனை நடத்துவது போன்ற நல்ல காரியங்களுக்காக செலவழிக்கப் படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த ராசா அறக்கட்டளையைப் பொறுத்து, அதற்குப் போதிய வருமானம் இல்லாமல் இருப்பதால், அந்த அறக்கட்டளை அதைச் சரியாக நடத்தவில்லை. அந்த மருத்துவ மனையில் மருந்து இல்லை என்று சொல்கிறார்கள். இந்த அறக்கட்டளையை அரசு எடுத்துக் கொண்டு சரிவர நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மருத்துவ மனை நிலைபற்றி எனக்குத் தெரியாது. இங்கே கொடுத்திருக்கின்ற விவரப்படி 1974–75 ஆம் ஆண்டில் அந்த நிர்வாகத்தினுடைய வருமானம் ரூ. 12,00,816, செலவு ரூ. 10,87,933 என்று கணக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமானால், அரசு பரிசீலிக்கும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: இந்த அறக்கட்டளை ஏற்படுத்துகிறபோது, அந்தந்த வட்டாரத்திலே உள்ள மக்களின்பிரதி பிரயோஜனத்திற்காக ஏற்படுத்தினார்கள். இப்போது வெவ்வேறு இடங்களில் அறம் செய்யலாம். அந்த

வட்டாரத்தில் 4 இடங்கள் அல்லது 10 இடங்கள் என்று ஒதுக்கிச் செய்தால்தான், அந்தந்த வட்டார மக்களுக்கு நலன் ஏற்படும், மன நிறைவும் ஏற்படும் என்ற அளவில் அரசு ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லிய யோசனையையும் நாம் ஏற்றுக்கொண்டு பரிசீலிக்கலாம்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தஞ்சாவூர் மகாராஜாவினுடைய அறக்கட்டளையினுடைய சொத்துக்கள் மிகவும் சீரழிந்து வருகின்றன. இந்த நிலையில் சொத்துக்களை அரசு பராதீனப்படுத்தி இந்த சொத்துக்களைப் பராமரிக்க என்ன என்ன செய்யவேண்டும் என்பதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இப்போதே துறையினுடைய நிர்வாகத்திலேதான் இருக்கிறது. இந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு மாவட்ட ஆட்சியாளர் தலைவராக இருந்து நடத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த சொத்துக்களிலிருந்து வருகின்ற வருவாயை அதிகப்படுத்துவதற்கு முறையான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம்.

(பிற்பகல் 4–20.)

திரு. சி. வி. ராஜகோபால்: இப்பொழுது அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்களின் வருவாயிலிருந்து ஏராளமான தர்மங்கள் செய்யப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. அரசும் கருணை இல்லங்கள் அமைத்து, மக்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்கிறது. அதுபோல் அறக்கட்டளைக்குச் சொந்தமாக உள்ள சொத்துக்களின் வருவாயைப் பயன்படுத்தி, ஏதாவது இல்லங்கள் அமைக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படிப்பட்ட நோக்கம் உள்ளது. ஏற்கனவே உடல் ஊனமுற்றோர்களின் மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் 6 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாகக் கொடுத்து வருகிறார்கள். ஏழை எளிய மாணவர்களின் மேம்பாட்டிற்காக இலவச விடுதி நடத்தி வருகிறார்கள். மற்றும் பல்வேறு தர்மங்கள் செய்து வருகிறார்கள்.

Deiveeka Peravai.

* 30. Q.—Thiru R. SAKTHI MOHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) the policies and principles of the Deiveeka Peravai, which is aided by the Tamil Nadu Government ; and

(b) the services rendered so far by that Peravai to the cause of religion and divinity and the benefits derived therefrom ?

தெய்வீகப் பேரவை.

திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழக அரசு நிதி உதவி செய்துவரும் தெய்வீகப் பேரவையின் கொள்கைக் கோட்பாடுகள் யாவை?

(இ) இதுவரை அப்பேரவை சமயத்திற்கும், தெய்வீகத்திற்கும் செய்துள்ள சேவைகளும், பயன்களும் என்னென்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ): அவையின் முன் இது பற்றிய அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். சக்தி மோகன்: இந்த விவர அறிக்கையைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இந்து சமயத்திற்கும் தெய்வீகத்திற்கும் தொண்டாற்றுகிற பெரியதொரு அவையாக இந்த தெய்வீகப் பேரவை இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. ஆனால் இந்துக்களுக்காக இயங்குகின்ற ஒரே அவையாக இது இருக்கின்ற காரணத்தால், தமிழக அரசு தெய்வீகப் பேரவைக்கு நிதி உதவவில்லை என்றும் தெரிவதால், நிதி உதவியோ அல்லது மானியமோ அளித்து, பரந்த அளவிற்கு அதை விரிவுபடுத்துவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த தெய்வீகப் பேரவை கோயில்கள், மடங்கள் மற்றும் அற நிலையங்கள் அளிக்கின்ற நன்கொடையைக் கொண்டு செவ்வனே நடைபெறுகிறது. அற நிலையத் துறையும் அவ்வப்போது மானியங்கள் வழங்குகின்றது. மேலும் பேரவை கிளைச் சங்கங்கள் அவற்றின் வருவாயிலிருந்து பங்கு தருகின்றன. இவை அனைத்தையும் வைத்து பேரவை சிறப்பாக இயங்குகிறது. அதற்குப் போதுமான நிதி வாயில்களும் இருக்கின்றன. சென்ற ஆண்டு தெய்வீகப் பேரவைக்கு மொத்தம் ரூபாய் 3,07,659.29 வருவாய் வந்துள்ளது.

திரு. ஏ. வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தெய்வீகப் பேரவைக்கு வரும் நிதியைக் கொண்டு, சமயப் பிரச்சாரம், நூல்வெளியீடு, அருளோசை, செய்திக்கதிர், மற்றும் இந்து தனியார் பள்ளிப் பேரவை முதலியவைகளை நடத்தி இந்து மதத்திற்கு அரிய தொண்டு

@ ....233-324 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செய்வதாக அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. இவ்வாறு இந்த தெய்வீகப் பேரவை ஆற்றும் தொண்டினால், தமிழ்நாட்டுக்கு ஏதாவது முக்கியமான பலன் ஏற்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பலன் என்று சொல்லும் போது, உடனடியாக ஏற்படுகிற பலனாக நான் எதையும் குறிப்பிட முடியாது. தமிழகத்திலுள்ள ஆலயங்களையும் அறநிலையங்களையும், பொறுத்தவரை, அவை ஏதோ அருள் வழங்குவதோடு மட்டுமல்லாமல், கல்விக் கூடங்கள் நடத்துதல், மருத்துவ மனைகள் நடத்துதல் போன்ற நற்காரியங்களைச் செய்வதுடன் நிதியும் வழங்குகின்றன. பழங்காலத்திலிருந்தே பல்வேறு தொண்டுகளைச் செய்து வந்திருக்கிறது. இடைக்காலத்தில் அவை விடுபட்டுப் போயிருந்தால், அந்தக் காரியங்களை தெய்வீகப் பேரவை நல்ல முறையில் செய்து வருகின்றது. எனவே எதிர் காலத்திலே தெய்வீகப் பேரவையி னுடைய தொண்டு தமிழக மக்களுக்குக் கிடைக்கும்.

திரு. சி. வி. ராஜகோபால்: அறிக்கையிலே மத மாற்றம் என்று கூறப்பட்டிருக்கிறது. என்ன மத மாற்றம், எந்த ஜாதியி லிருந்து எந்த ஜாதிக்கு மத மாற்றம் செய்வதை மத மாற்றம் என்று சொல்லலாம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஜாதி என்பது வேறு, மதம் என்பது வேறு.

திரு. சி. வி. ராஜகோபால்: ''மத மாற்றத்திற்குத் துணை செய்வதிலும் பெரிதும் ஈடுபட்டு வருகின்றது'' என்று கூறப்பட்டிருக் கின்றது. மத மாற்றம் என்றால், கிறிஸ்தவர் முதலியார் ஆகலாமா? முதலியார் பார்ப்பனர் ஆகலாமா? பார்ப்பனர் அரிசன் ஆகலாமா? மத மாற்றம் என்றால் என்ன என்பது குறித்து நான் அறிய விரும்புகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: அச்சிலே பிழை ஏற்பட்டிருக் கிறது. ''தாய் மதத்திற்குத் திரும்பி வருகின்றவர்களுக்குத் துணை செய்வதிலும் பெரிதும் ஈடுபட்டு வருகின்றது'' என்று இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்தக் குறிப்பில் ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஒரு திருத்தத்தை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். ''தீண்டாமை ஒழிப்பிலும் மத மாற்றத்திற்குத் துணை செய்வதிலும் பெரிதும் ஈடுபட்டு வருகின்றது'' என்று இருக்கும் வார்த்தைகளுக்குப் பதில் ''தாய் மதத்திற்குத் திரும்பி வருகின்றவர்களுக்குத் துணை செய்வதிலும் பெரிதும் ஈடுபட்டு வருகின்றது'' என்று திருத்திக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1975 அக்டோபர் 27]

திரு. ஆர். சக்தி மோகன்: தமிழ்நாடு தெய்வீகப் பேரவை பரந்த அளவில் சிறந்த பணிகளை ஆற்றி வருவதாகத் தெரிவதால் மிகப்பெரும் பணம் படைத்த மடாதிபதிகளான தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந் தாள், காஞ்சி காமகோடி பெரியவர் இவர்கள் எல்லாம் தமிழ் நாடு தெய்வீகப் பேரவைக்கு ஏதாவது நிதி உதவி செய்கிறார்களா? அப்படிச் செய்யவில்லையானல், அடிகளார் அவர்கள், அவர்களை அணுகி தெய்வீகப் பேரவைக்கு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கோருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குனறக்குடி அடிகளார் அவர்கள் இந்த அவையில் ஒரு உறுப் பினராக இருக்கிறார்கள். அவர்கள் தமிழக தெய்வீகப் பேரவையின் தலைவராக இருக்கிறார்கள். மேலும் ஒரு மடத்தினுடைய தலைவராகவும் இருந்து சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள். தெய்வீகப் பேரவையில் இருக்கின்ற உறுப்பினர்களும் மடத்தினுடைய தலைவர் களாக இருக்கிறார்கள். லடசக் கணக்கான நிதி தெய்வீகப் பேரவைக்கு என்று இருக்கின்றது. பல ஆண்டுகளாக அது சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: அவர்களெல்லாம் கொடுக்கின்ற வரையிலே நெறிப்படுத்துவதற்காக சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று நான் அரசுக்கு ஏற்கெனவே தெரிவித் திருக்கிறேன். அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அதைப்பற்றி அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அவர்களாகவே ஒரு தெய்வீகப் பேரவையை ஆரமபித்தார்கள். இப்பொழுது அவர்களாகவே சட்டத்தில் ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். சட்டத்திலே திருத்தம் செய்வதுபற்றி அரசு யோசிக்க வேண்டியிருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: உண்மைதான். நாங்களாகத் தான் ஆரமபித்தோம். முனனாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்தான் முன்னின்று நடத்தி வைத்தார்கள். அரசே முன் னின்று நடத்தினால்தான், எதுவும் நன்றாக நடக்கும். நாங்கள் 4 பேர் சேர்ந்தால், 4 கிரகங்கள் சேர்ந்தாற் போல் ஆகும். பொறுப்பை எங்கள் மீது மட்டும் சுமத்தாமல், அரசு முன்னின்று நெறிமுறைப்படுத்த வேண்டுமென்று நான் மிகவும் அன்போடும் உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தெய்வீகப் பேரவை என்று பெயர் வைத்து விட்டு, அதற்கு அரசு நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோருவது வியப்பாக இருக்கிறது. அவர்களாகவே முன்னின்று அதை ஊக்கத்தோடு நடத்துவது தான் சாலச்

சிறந்ததாகும். அரசே கட்டாயப்படுத்தி தெய்வீகப் பேரவைக்கு ஒவ்வொரு ஆதீனமும் முடிந்த அளவு நிதியுதவி செய்ய வேண்டு மென்று கேட்பது அவ்வளவு பொருத்தமல்ல.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: திரும்பவும் குறுக்கிடுவதற்கு, அன்புகூர்ந்து மன்னிக்க வேண்டும். கட்டாயப்படுத்தி எங்களுக்கு நிதி உதவி அளிக்கச் செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. ஒவ் வொரு ஆண்டும் 'டைவர்ஷன்-அப்ளிகேஷன்' போட்டு, ஆணையரிடமிருந்து அனுமதி பெற வேண்டியுள்ளது அப்படி 'டைவர்ஷன்-அப்ளிகேஷன்' கொடுக்காமல, பட்ஜெட்டிலே இவ்வளவு விழுக்காடு என்று நிதி ஒதுக் குவது மூலமாகவே கிடைக்கிற முறையில் வழி அமைத்துத் தர வேண்டும் என்பது தான் எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது இருக்கின்ற அற நிலையச் சட்டத்தில் இந்து மதத்தினுடைய வளர்ச்சிக்கு என்று நிதி வசதிகள் செய்வதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அப்படியிருக்க தெய்வீகப் பேரவைக்கு என்று ஒரு குறிப்பிட்ட அளவு கட்டாயமாக நிதி கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: கட்டாயம் என்பதல்ல. 'டைவர் ஷன்-அப்ளிகேஷன்' கொடுக்காமல் பட்ஜெட்டிலே அப்ரூவல் வாங்கிக் கொண்டு நிதி ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(பிற்பகல் 4-30)

2. அறிவிப்பு

பேரவையிலிருந்து செய்திகள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பேரவையால் நிறைவேற்றப் பட்டு அரசியலமைப்புச் சட்டத்தின் 199–வது பிரிவுப்படி பணச்சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவை யின் பரிந்துரைக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவு பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது:

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி-உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975).